முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.
அமர்வு வழக்கு எண் : 183/2024

அரசுதரப்பு 1 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சேகர்** | வயது | : | 55 |
| தந்தை/கணவர் பெயர் | : | துரைசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 05.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது வடலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். 2020 ஆம் வருடம் 25.05.2020 அன்று ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது முதல் நிலைகாவலர் 1044 திரு.வீரமணி மற்றும் காவலர் 2444 திரு.அசோக்குமார் ஆகீயோர்கள் சகிதம் கிடைத்த இரகசிய தகவலின் படி உதவி ஆய்வாளர் உத்திரவின் படி மணல் திருட்டு சம்பந்தமகா மாலை 14.00 மணிக்கு ஸ்ரீ நெடுஞ்சேரி வெள்ளாற்றின் தென்னாற்றங்கரையில் கண்காணித்துக்கொண்டு சென்ற போது இரட்டை டயர் மாட்டு வண்டியில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த பொன்னுசாமி வயது 65, த/பெ. கோவிந்தசாமி சிவன் கோவில் தெரு, டி.பவழக்குடி, ஸ்ரீ முஷ்ணம் தாலுக்கா என்பவர் இரட்டை டயர் மாட்டு

வண்டியில் சுமார் 1/4 யூனிட் ஆற்று மணலை எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் எடுத்து வரக்கூடாது என்று தெரிந்தும் மனித உயிர் வளத்திற்கு பயன்படுத்தும் குடிநீர் வளத்தினையும் கனிம வளத்தினையும் அழிவு செய்யும் வகையில் ஸ்ரீ நெடுஞ்சேரி வெள்ளாற்றிலிருந்து கள்ளத்தனமாக எதிரி திருடி வந்துள்ளது தெரிந்து எதிரியை காரணம் கூறி 16.05 மணிக்கு கைது செய்தேன். பின்பு அந்த இடத்தில் அன்னிய சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் வந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் 16.10 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் மணலுடன் இரட்டை டயர் மாட்டு வண்டியை கைப்பற்றினேன். பின்பு தடயம் மற்றும் எதிரி சகிதம் 18.00 மணிக்கு நிலையம் வந்து கைப்பற்றுதல் மகசர் மற்றும் தனி அறிக்கையுடன் ஆஜர் செய்தேன். தனி அறிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். தனி அறிக்கை **அ.த.ச.ஆ.1** ஆகும். கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.2** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் மற்றும் வீடியோவில் உள்ள வண்டி தான் கைப்பற்றப்பட்டது ஆகும். அவை **சா.பெ.1 மற்றும் சா.பொ.2** ஆகும். வழக்கு சொத்து எண் 37/2021, பின் எதிரி மீது நிலைய குற்ற எண் 260/2020,பிரிவுகள் 379, 430 IPC 21(1) Mines and Mineral Act படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு சென்றேன் என்று நேரத்தினை குறிப்பிட்டு தனி அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

தனி அறிக்கை கொடுத்ததின் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை நகலை காலை 14ல் கையொப்பமிட்டு வாங்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். பக்கத்தில் நிறைய கிராமங்கள் உள்ளதால் அந்த வழி தான் பொதுவாக பயன்படுத்தும் வழி என்றால் சரிதான். நெடுஞ்சேரி வெள்ளாறு தென்கரை என்பது சுமார் ஒன்றரை கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் மணல் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்பதற்கு நான் அந்த இடத்திற்கு சென்று பார்வை மகசர் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வண்டியை கைப்பற்றிய இடத்தில் தான் எதிரியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். மகசரில் எந்த இடத்தில் வண்டி கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை ,தென் கரை என்று மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி எந்த மணலும் அள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்பதும் புள்ளி விவரக் கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்பதும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், என்னால் தனி அறிக்கை ஜோடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

**<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>**

அமர்வு வழக்கு எண் : 183/2024

அரசுதரப்பு 2 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **வீரமணி** | வயது | : | 44 |
| தந்தை/கணவர் பெயர் | : | கணேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 05.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது விருத்தாசலம் காவல்நிலைய தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். நான் ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது 25.05.2020 ந் தேதி பகல் 16.00 மணிக்கு ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் D.சேகர் அவர்களுக்கு உதவியாக நானும், என்னுடன் காவலர்–2444 திரு.அசோக்குமார் சகிதம் கிடைத்த இரகசிய தகவலின் படி உதவி ஆய்வாளர் அவர்களின் உத்தரவுபடி மணல் திருட்டு சம்மந்தமாக ஸ்ரீநெடுஞ்சேரி வெள்ளாற்றின் தென்கரையில் கண்காணித்து கொண்டு சென்ற போது இரட்டை டயர் மாட்டு வண்டியில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த பொன்னுசாமி வயது–65, த/பெ கோவிந்தசாமி, சிவன் கோயில் தெரு, T. பவழங்குடி, ஸ்ரீமுஷ்ணம்–(T.K) என்பவர் அந்த இரட்டை

டயர் மாட்டு வண்டியில் சுமார் 1/4 யூனிட் ஆற்று மணலை எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் எடுத்துவரக்கூடாது என தெரிந்தும், மனித உயிருக்கு பயன்படுத்தபடும் குடிநீர் வழங்கும் கனிமவளத்தை அழிம்பு செய்யும் வகையில் ஸ்ரீநெடுஞ்சேரி வெள்ளாற்றில் இருந்து மணலை கள்ளத்தனமாக எதிரி திருடி வந்துள்ளது தெரிந்து எதிரியை கைதுக்கான காரணம் கூறி 16.05 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் கைது செய்தார் பின்பு அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால் உடன் சென்ற எங்கள் முன்னிலையில் 16.10 மணிக்கு மகஜரில் மணலுடன் கூடிய இரட்டை டயர் மாட்டு வண்டியை கைப்பற்றினார். பின்பு எதிரி மற்றும் தடயம் சகிதம் 18.00 மணிக்கு நிலையம் வந்து கைப்பற்றுதல் மகசர் மற்றும் தனி அறிக்கையுடன் நிலையத்தில் ஆஜர் செய்தார். அதன் பேரில் ஸ்ரீமுஷ்ணம் காவல் – 260/2020 U/S 379,430 IPC, 21(1) Mines & Minerals Act வழக்கு பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். எனது கையெழுத்து **அ.த.சா.ஆ. 3** தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் மற்றும் வீடியோவில் உள்ள வண்டி தான் கைப்பற்றப்பட்டது ஆகும். வழக்கு சொத்து எண் 37/2021.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு சென்றேன் என்று நேரத்தினை குறிப்பிட்டு வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

கைப்பற்றியதாக சொல்லும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். பக்கத்தில் நிறைய கிராமங்கள் உள்ளதால் அந்த வழி தான் பொதுவாக பயன்படுத்தும் வழி என்றால் சரிதான். நெடுஞ்சேரி வெள்ளாறு தென்கரை என்பது சுமார் ஒன்றரை கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். வண்டியை கைப்பற்றிய இடத்தில் தான் எதிரியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். மகசரில் எந்த இடத்தில் வண்டி கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை, தென் கரை என்று மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி எந்த மணலும் அள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்பதும் புள்ளி விவரக் கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்பதும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மகசரில் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு போகவில்லை என்றால் சரியல்ல. மேல் அதிகாரி சொன்னதில் பேரில் தான் கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.